எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Rg. No.S.159 of 25-8-1965

Publication of All Ceylon Gandhi Seva Sangam


மலர் – 24 இதழ் – 02,03 பெப்ரவரி, மார்ச் – 2009 விலை ரூபா 10/-


# அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் காந்திஜி ஜெயந்தி நிகழ்வுகள்



மன்னார் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் இல்லத்தில் மகாத்மா காந்தியடிகளின் 139 ஆவது ஜெயந்தி தின நிகழ்வு நடைபெற்ற போது இல்லத்தின் இயக்குனர் தேசபந்து டாக்டர் A.அரசக்கோன், காந்தி படத்திற்கு மலரஞ்சலி செலுத்துகிறார்.

2008. அக்டோபர் 3



பருத்தித்துறையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் உபதலைவர் ஆ.வடிவேலு தலைமையில் காந்தி ஜெயந்தி தினம் நடைபெற்ற போது மகாத்மாகாந்தி அடிகளின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டபின் யா/வேலாயுதம் ம.வி., யா/தும்பளை சைவப்பிரகாசம் ம.வி மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் எடுத்துக் கொண்ட படம் இது.

2008. அக்டோபர் 2.

**திருகோணமலையில்.....**

திருகோணமலை காந்தீயத் தொண்டர்களின் ஏற்பாட்டில் அண்ணல் மகாத்மாகாந்தியின் நினைவும் அகில இலங்கை காந்தி சேவாசங்கத் திருகோணமலைக் கிளை புனரமைக்கும் நிகழ்வும் 02.10.2008 வியாழக்கிழமை மாலை காந்திநகர் வாசிகசாலையில் நடைபெற்றது.

இலங்கை இந்து இளைஞர் பேரவை தலைமைச் செயலாளர் சிவஞானச்செல்வர் செ.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'இன்றைய நிலையில் காந்தீயம்' என்ற தலைப்பில் ஆ.யதீந்திரா சொற்பொழிவாற்றினார். இறைபணிச் செம்மல் பொ.கந்தையா (காந்தி ஆசிரியர்) 'காந்தீய வாழ்க்கை' எனும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

**மன்னாரில்....**

காந்தியடிகளின் 139 ஆவது பிறந்ததினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.சண்முகலிங்கம் தலைமை வகித்தார். அண்ணலின் திருவுருவப் படத்திற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து மாணவன் சிபோஜன் அடிகளாரைப் பற்றிப் பேசினார். 'காந்தீயம்' பத்திரிகை நடத்திய பொது அறிவுக் களம் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மேற்படி கல்லூரி மாணவன் ரி.மகாராசா பிரதி அதிபரிடமிருந்து பரிசினைப் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாக சபை உறுப்பினரும் 'காந்தீயம்' ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.


**உண்ணாவிரதப் போராட்டம்.**

மன்னார் கனகதுர்க்கை அம்மன் இல்லத்தில் நாட்டில் அமைதி வேண்டி 'காந்தீயம்' ஆசிரியர் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அங்கு மாலை 4 மணிக்கு மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் முக்கியஸ்தர் தேசபந்து தேசகீர்த்தி டாக்டர் ஏ.அரசக்கோன் காந்தி படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து இல்லச் சிறுவரும் ஆசிரியர்களும் மலரஞ்சலி செலுத்தினர். அமைதி வணக்கம், பிரார்த்தனை (பஜனை) என்பன நடைபெற்றன. இல்லப் பொறுப்பாளர் செந்தூரன் ஆசிரியர் பஜனையை நெறிப்படுத்தினார். அடிமைத் தனத்திலிருந்து விடுபட காந்தியக் கொள்கைகளே சிறந்த வழி என்பதை வலியுறுத்தியும், இன்று இருக்கக் கூடிய அனைத்துத் தடைகளையும் அமைதி வழியிலான புரட்சி மூலம் உடைத்தெறிய சமூகத்தை தயார்ப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியும் 'காந்தீயம்' பத்திரிகை ஆசிரியர் உரையாற்றினார். டாக்டர்.அரசக்கோன் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தார். எல்லோருக்கும் பிறந்த தின இனிப்பு வழங்கப்பட்டது.

**யாழ்ப்பாணத்தில்....**


அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடிகளாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்த சங்க நிர்வாகிகள் சங்கப் பணிமனையில் பிறந்த நாள் கூட்டத்தை நடத்தினர். பருத்தித்துறையில் சங்கத்தின் உபதலைவர் ஆ.வடிவேலு தலைமையில் ஜயந்திதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**













2008 அக்டோபர் 2 சர்வதேச அகிம்சை தினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் ஸ்ரீ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது. சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர் ஷாந்தன் சத்தியகீர்த்தி காந்தியின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்திய பின் உரை நிகழ்த்துவதை **முதல் இரு படங்களிலும்** காந்தீயம் நடத்திய பொது அறிவுக்களம் போட்டியில் முதற்பரிசு பெற்ற மாணவன் ரி.மகாராசாவுக்கு கல்லூரி பிரதிஅதிபர் சண்முகலிங்கம் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை **மூன்றாவது படத்திலும்** காணலாம்.




பருத்தித்துறை காந்தி ஜெயந்தி நிகழ்வில் குடத்தனை அ.மி.த.க. பாடசாலை மாணவி அடிகளின் உருவச்சிலைக்கு மாலை அணியும் போது பத்திரிகையாளர் திருச்செல்வம், அகில இலங்கை காந்தி சேவா சங்க உபதலைவர் ஆ.வடிவேலு, பாடசாலை அதிபர் ஆகியோர் காணப்படுவதை **முதலாவது படத்திலும்**, குடத்தனை அ.மி.த.க.பாடசாலை மாணவர்கள் "ரகுபதிராகவ ராஜாராம்" பாடல் இசைப்பதை **இரண்டாவது படத்திலும்**, சிவஸ்ரீ தியாக் சோமஸ்கந்தராஜக்குருக்கள் சொற்பொழிவாற்றுவதை **மூன்றாவது படத்திலும்** காணலாம்.

## அன்பர் தபால்

காந்தீயம் பத்திரிகை மிகச்சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. பத்திரிகையின் சகல பக்கங்களிலும் சகல அம்சங்களிலும் காந்திய சிந்தனைகள் விரவிக்கிடக்கின்றன. மில்க்வைற் கனகராசா, தந்தை எஸ்.ஜே.வி, ஆர்.பிரேமதாச, காந்தி மாஸ்டர் பொ.கந்தையா ஆகியோரைப் பற்றிய சங்கதிகள் எல்லாம் அபாரம். பாடசாலைப் பிள்ளைகளும் காந்தீயத்தால் கவரப்பட்டுள்ளமையையும் பத்திரிகை மூலம் நிறைய அறிந்து கொண்டேன். காந்தீயம் நல்ல அச்சுப்பதிவு எழுத்துப் பிழைகள் இல்லை. கவர்ச்சியான பக்க வடிவமைப்பு காந்தீயம் வெளிவந்தால் அதை முழுமையாக ஆர்வமுடன் படிப்பது எனது வழக்கம். காந்தீயம் என்னைப் போன்றதொரு வாசகனையும் பத்திரிகையாளனையும், கவருவதென்பது அதன் சிறப்பையும் தரத்தையும் உணர்த்தி நிற்கின்றதெனலாம்.

**செல்லப்பா நடராசா** (J.P)
கோண்டாவில் மேற்கு.

## படிப்பினை

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாய் எண்ணி
காந்தியைப் போல் பொது நோக்கும் பொறுமை வேண்டும்
மகிழ்ச்சியிலே மதிமயங்கித் தடுமாறாமல்
காந்தியைப் போல் மனசடக்கப் பயில வேண்டும்
வெகுட்சிதனை வேரொடு களைந்து நீக்க
காந்தியைப் போல் விரதங்கள் பழக வேண்டும்
நிகழ்ச்சிகளை காந்தியைப் போல் நிறுத்துப் பார்த்து
நேர்மையுடன் குற்றமெல்லாம் நீக்க வேண்டும்.

(தொடரும்) **(நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சலி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)**

# காந்தீயம்

காந்தி ஆண்டு 140, பெப்ரவரி - மார்ச் - 2009


## விடுதலை பெறுவோம்

மனிதன் தன்னைச் சூழவுள்ள சகல கட்டுக்களிலிருந்தும் தடைகளிலிருந்தும் விடுபடுதலே விடுதலை ஆகும். சமூகத்தில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் போன்ற கொடிய நோய்களிலிருந்து மனிதன் விடுதலை பெறவேண்டும். காந்திஜி சேவகிராமில் ஆற்றிய முதல் உரையில் "மனிதர்களுக்குள் உயர்வு, தாழ்வு கூறுவது கொடும்பாவம். இதை அகற்ற வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். நான் நோயுற்றவர்களுக்குப் பணிவிடை செய்வேன். உங்களை தற்சார்பு உள்ளவர்களாக ஆக்க முயற்சிப்பேன்" என்று கூறினார்.

கல்வியறிவு பெறுதல் விடுதலைக்கு அடிப்படையான ஒன்று என்று கூறிக்கொண்டாலும் கல்வியில் உயர்ந்த சமூகங்களின் மத்தியிலிருந்தும் இவ்வாறான பண்புகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

சமூக விடுதலையைக் கடந்து இனவிடுதலை நோக்கி பயணம் செய்யும் போதும் அங்கு காணப்பட்ட இயல்புகள் இனவிடுதலையிலும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். விடுதலைக்கு தூரநோக்கும், அர்ப்பணிப்பும், புரட்சிகர சிந்தனையும், போராட்ட குணமும் முக்கியமானவையாகும். தேசவிடுதலைக்கான மார்க்கத்தைத் தேடிய மகாத்மா காந்தியடிகளிடத்தில் மேற்சொன்ன கருத்தியல்கள் நிறையவே காணப்பட்டன. போர் அர்த்தமற்ற ஒன்று என்றும் யுத்தம் மூலமாக நிலையான அமைதி ஒன்றை உலகில் என்றைக்குமே காணமுடியாது என்றும் புத்தர், இயேசு, காந்தி போன்ற மகான்கள் கூறிச் சென்றுள்ளார்கள். அஹிம்சை வழியான போராட்டம் மக்கள் மனங்களில் பாரிய மாற்றங்களை உண்டு பண்ணவல்லது. மனமாற்றம் ஒவ்வொருவரிலும் ஏற்படும் போது உலக மாற்றம் தானாகவே சாத்தியமாகும்.

மாற்றத்தை விரும்பாத தீயசக்திகள் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் பழைமைவாத எந்த அடிப்படையும் நியாயமுமற்ற கண்மூடித்தனமான சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் சமூகத்தில் கட்டிக்காப்பதன் ஊடாக தமது மேலாண்மையை நிலைநாட்டி வருகின்றன. இந்த வகையான அடக்குமுறைக் கலாசாரத்தை வளர்ப்பதில் முதலாளி வர்க்கத்தால் போஷிக்கப்படும் மக்கள் ஊடகங்கள் என்று தம்மை தாம் சொல்லிக் கொள்ளும் தினசரிகளும், ஒலி, ஒளிபரப்பு நிலையங்களும், இணையத்தளங்களும் முதன்மை வகிக்கின்றன. இவற்றின் மாயாயாலங்களுக்கு விலை போகின்ற நடுத்தர மற்றும் அடிநிலை மக்கள் தம்மைத் தாம் திரும்பி ஒருமுறை பார்ப்பதற்குரிய கணங்களையும் இழந்து அவற்றின் மகுடிகளுக்கு ஆடுகின்ற பாம்புகளாக மாறியுள்ளமை , கவலை தரும் விடயமாகும். இதனால் அவர்களின் விடுதலை குறித்த உணர்வுகளும் மாற்றம் விரும்புகின்ற மனோபாவமும் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன.

மேலும் சமூக அமைதியைக் குலைத்து அதன் மூலமாக அரசியல் ரீதியாக இலாபமடைய முனையும் குழுக்களின் இலக்காகவும் அடிமட்ட மக்களே இருந்து வருகிறார்கள். யுத்தத்தின் பெயரால் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு விரட்டியடிக்கப்படுகிறார்கள். இதனால் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. எதிர்கால உலகநோக்குடைய எந்த ஒரு மனிதனும் யுத்தத்தையும் மனித அழிவையும் விரும்பமாட்டான். முரண்பாடுகளுக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டுமென்றே எனவே காந்திஜி வலியுறுத்தினார். காந்திய வழியில் சிந்திப்போம். செயலாற்றுவோம் விடுதலை பெறுவோம்.

**ஷாந்தன் சத்தியகீர்த்தி**

## வரப்பெற்றோம்

### சங்கமம்

முஸ்லிம் சமாதானச் செயலகத்தின் தமிழ் மாதாந்த வெளியீடாக 'சங்கமம்' வெளிவந்துள்ளது. மேற்படி செயலகத்தின் செயற்பாடுகள் இதில் விபரிக்கப்பட்டுள்ளன. நிரந்தர சமாதானம் இலங்கையில் துரிதமாக நிலைநாட்டப்பட வேண்டும். அது முஸ்லிம் மக்களையும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் திருப்திப்படுத்தக் கூடியவாறு அமையவேண்டும் என்பதே முஸ்லிம் சமாதான செயலகத்தின் குறிக்கோளாகும் என்று அதன் ஆசிரியத்

தொடர்புகளுக்கு:-
**Peace Secretariat for Muslims,**
No-6, Alwis Terrace,
Colombo 3

### பொங்கல்

வவுனியா, செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியப்பணி புரியும் தி.உதயசூரியன் எழுதிய 'பொங்கல்' என்ற சிறு நூல் வெளிவந்துள்ளது. இதில் இரண்டு கவிதைகளும் சிறுகதை ஒன்றும் இடம்பெற்றுள்ளன. இவ்வாக்கம் தன்னுயிர் போல் பிறவுயிர்களை நேசிக்கும் பண்பை வலியுறுத்துவதுடன் நமது நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் சிலவற்றின் மீது வினாக்களைத் தொடுப்பதாகவும் உள்ளதாக இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய அதிபர் எஸ்.ஜேசுதாசன் குறிப்பிட்டுள்ளதோடு நமது மாணவர்கள் படித்து இன்புறுவதுடன் நல்மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ள இந்நூல் கருவியாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்புகளுக்கு :
**தி.உதயசூரியன்,** ஆசிரியர்,
செட்டிகுளம் மகா வித்தியாலயம்,
செட்டிகுளம், வவுனியா.

### வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

உலகவரலாற்றில் முத்திரை பதித்த பிரபலங்கள் 50 பேரின் சுருக்கமான வரலாற்றை அவர்களின் புகைப்படங்களோடு தாங்கி வெளிவந்துள்ளது "வரலாற்றில் தடம் பதித்தவர்கள்" பாகம் I நூல். காயத்திரி வெளியீடாக வந்துள்ள இந்நூலினை முன்னாள் அதிபர் பி.பி.அந்தோனிப்பிள்ளை ஆக்கியுள்ளார். இவர் ஏற்கனவே சிறுவர் கதம்பமாலை, கட்டுரைக்கனி, கிராமத்தின் இதயம், கட்டுரைச் சுரங்கம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். "வரலாற்றில் தடம்பதித்தவர்கள்" மாணவர்களுக்கு மட்டுமல்லாது சகலருக்கும் பயன்படக்கூடிய ஒரு நூல்.

தொடர்புகளுக்கு:
**காயத்திரி பப்ளிகேஷன்,**
த.பெ.இல 64, தெஹிவளை,
இலங்கை.

### மகாத்மாகாந்தி அடிகளின் அருள்மொழிகள்

மகாத்மாகாந்தி அடிகளின் சுயசரிதையான சத்திய சோதனையிலிருந்து அடிகளாரின் அருள்மொழிகளைத் தொகுத்து பொ.கந்தையா (காந்தி ஐயா) அவர்கள் சிறுபிரசுரம் செய்துள்ளார். காந்தி ஐயாவின் துணைவியார் திருமதி கந்தையா இராசநாயகி (காந்தி அம்மா) அவர்களின் ஒரு வருட நினைவு தினத்தை முன்னிட்டு அவர்களது நினைவாக

தொடர்புகளுக்கு :
**பொ.கந்தையா** (காந்தி ஐயா)
முத்துக்குமாரசுவாமி கோயிலடி,
திருகோணமலை.

# காந்திஜி கடைப்பிடித்த அந்த ஆத்மீகம் வீண்போகாது

நேர்காணலில் காந்திபக்தன் முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம்



புலவர் வை.க.சிற்றம்பலம்

**1. தங்களுடைய பிறப்பு, பள்ளிப்பருவம், தொழில் குறித்து சுருக்கமான அறிமுகம் ஒன்றைத் தருவீர்களா?**

எனது சொந்தவூர் மஞ்சந்தடி இணுவில். தந்தையார் இணுவில் வைத்தியலிங்கம் கந்தர் தாயார் இணுவில் ஆனந்திப்பிள்ளை கந்தர் தந்தையார் தொழில் - விவசாயம், வியாபாரம். எனது பிறந்த நாள் 1914.09.16. ஆரம்ப கல்வி இணுவில் அ.மி.பாடசாலை. மேற்கல்வி - கோண்டாவில் சைவவித்தியாசாலை, (இந்து ம.ம.வித்தியாலயம்) 1930 ல் பிறிலிம் சோதனையிற் சித்தி. பண்ணிசை வடிவேற் சுவாமியாரிடம் கற்றேன். தொழில்-1931-32 ஆரம்ப ஆசிரியர், இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம்.

இதுவரை அயராமல், ஓயாமல் மரபியல் நூல்கள் பல வெளியிட்டுள்ளேன். பாரதியார் பாடல் சந்தப்படியும் இடையிடையே பாடியுள்ளேன். தொல்காப்பியத்தில் அடங்காத பாடல்கள் எதுவுமேயில்லை.

சங்தப்படி சில புதுமையாகத் தோன்றும் திருப்புகழ் மாதிரி.

**2.காந்திய தத்துவம் அல்லது அஹிம்சைக் கொள்கைகளின் பால் தாங்கள் கவரப்பட்ட விதம் குறித்துக்கூறுவீர்களா?**

வித்தியாசாலையின் பக்கத்தில் ஒரு சிவன் கோயில். அங்கே வேதாரணியம் சைவக்குருக்கள் அருணாசலம் என்பவரும் அவரது 11 வயதுச் சிறுவனும் வசித்தனர். யான் அக்காலத்தில் 8 முழ வேட்டி கட்டியிருந்தேன். அக்குருக்களின் மகன் எனது வேட்டியின் முகப்பைக் கிழித்தான். தகப்பனிடம் சொன்னேன். அவர் உமது வேட்டி சீமைத்துணி, ஆதலால் கிழித்தான் என்றார். ஆகவே எனக்குக் காந்திப்பாதை தெரிந்தது. அதனால் லோகோபகாரி வாரப்பத்திரிகை, சுதேச மித்திரன் முதலிய பத்திரிகைகளுடன் மாதம் பத்திரிகை ஆனந்தவிகடனும் படிக்கலானேன். கதருடையை உடுத்து, கதர்ச்சால்வையும் அணியத் தொடங்கினேன்.

எனது தகப்பனார் 1930ல் காலமானார். அவர் செய்த வியாபாரம் வீழ்ந்தது. தாயாரும், சகோதரர் ஒருவரும் கமஞ்செய்தும் பசு வளர்த்தும் சீவியம் நடத்தினர்.

இந்நிலையில் யாரும் எங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை. கடவுள் தான் துணை. கடவுள் வழிநடத்த நடந்தோம் என்னுடன் ஏனைய இருதம்பிமாரும் உபாத்தியாரானோம் நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த நிலையும் காந்தீயத்தைக் கடைப்பிடிக்க எனக்கு உதவியது. பயிற்சி முடிந்து இந்து போட்டில் எனக்கு கிடைத்த முதற்பள்ளிக்கூடம் முள்ளிவளை. என்றும் தீமைக்குப் போகவில்லை. ஆகவே என்பக்கம் வெற்றி. எனது வீட்டுப் பொறுப்பினால் வீட்டிலிருந்து போய் வரப்பள்ளிக்கூடங்களை பெற்றுக் கொண்டேன். அதிகமாக கோயில் வணக்கத்திலும், பெரியோர் சகவாசத்திலும் குழைந்து நடந்தேன்.

**3. மகாத்மாகாந்தியடிகளின் இலங்கை விஜயம் குறிப்பாக யாழ்ப்பாண விஜயம் குறித்து சொல்வீர்களா?**

நான் சிறுவனாய் (12) இருக்கும் போதே, காந்தி மகான் யாழ்ப்பாணம் (1927) வந்தார். மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கு அவர் வந்த போது சிறுவர் கூட்டத்துடன் சேர்ந்து அச்சந்தியில் கண்டு கொண்டேன் அவ்வளவு சனசமுத்திரம்.

**4. இலங்கையில் காந்திய இயக்கங்களின் தோற்றமும் அதனால் ஏற்பட்ட சமூக மாற்றங்களும் குறித்து.....**

அக்காலம் வானொலி கிடையாது. அதிகமாக 60 வீத ஆசிரியர்களே காந்தீயத்தைப் பின்பற்றி எல்லாம் காந்தி மயமாகக் காட்சி தந்தனர். யாழ்ப்பாணத்திலும் பெரிய சங்கங்கள், மகாநாடுகள் நடைபெறலாயின. தென்னிந்திய பத்திரிகைகளே யாழ்ப்பாணத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றன. அதுவும் காந்தீயம் பரவ உத்வேகம் கொடுத்தது. யாழ்ப்பாண மக்கள் அக்காலம் மிகச் சத்தியவந்தராய் இருந்தமையால் காந்திஜியிடம் அதிகம் பக்தி கொண்டனர்.

**5. அகில இலங்கை காந்திசேவா சங்கத்துடன் தாங்கள் வைத்திருந்த தொடர்புகள் பற்றி.....**

அக்காலத்தில் நீர்வேலியைச் சேர்ந்த திரு.வேலாயுதபிள்ளை அவர்கள் சங்கத்தின் காரிய தரிசியாயிருந்தார். அவரைப் பார்த்தாலே ஒரு தியாக புருஷராக பின்குடுமியுடன் ஒரு பக்கத் தோளில் சால்வையுடன் வேட்டியணிந்த ஒரு வாடல் தோற்றமுடையவர். உண்மையில் அவரது முகம் விபூதி நிறைந்த நெற்றியுடன் சாந்த நிலையிற் காணப்படும். சங்கத்துக்கு அங்கத்தவரைச் சேர்ப்பது தான் அவருடைய வேலை. ஆளுக்கு ரூபா ஒன்று தான். காந்தீய வழி எனக்கு அதிகம் பிடிப்பதனால் தீபாவளி, வருடப்பிறப்புக் காலங்களில் ஒரு நாலு முழமும், ஒரு அங்க வஸ்திரமும் மாத்திரமும் எனக்குப் போதுமானவை.

குறிப்பு: 1932ல் ஆசிரியப் பயிற்சிக்காக திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலையில் நேர்முகப் பரீட்சைக்கு வேட்டி சால்வையுடன் சென்ற போது அங்கிருந்த அதிபர் சுவாமிநாதன், உபஅதிபர் பொ.கைலாசபதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரும் காந்தியப் புடைவையை அணிந்திருந்தனர். திரு.கைலாசபதி எனது காந்தி உடை பற்றி விசாரித்தார்.

**6. காந்திஜியின் சுதந்திரப் போராட்டம் இலங்கை அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகளில் ஏற்படுத்திய செல்வாக்கு அல்லது தாக்கம் என்ன?**

பெரும்பாலும் தமிழரிலே ஒரு உந்து சக்தியை ஏற்படுத்தியதென்பதில் சந்தேகமில்லை. இதில் அக்காலம் சிங்களவரும், தமிழர், முஸ்லிம்களும் வஞ்சகமில்லாத இலங்கை மக்கள் கூட்டாளிகள்.

அக்காலந்தான் மெல்ல மெல்ல திருகோணமலையில் குடியேற்றம் தொடங்கிய காலம். தமிழர் தம்மைத் தாம் திரும்பி நோக்கிய காலம். ஆசிரியரான பின் நான் ஏதேனும் கூட்டங்களுக்குப் போகும் போது வேட்டி சால்வையுடன் மாத்திரம் செல்ல என்னை எல்லோரும் ஒருமுறை திரும்பிப் பார்ப்பார்கள். அதன் முன் காந்திப் புடவைகள், தமிழ்ப் பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. உள்ளூர் நெசவு ஆரம்பிக்கப்பட்டதால் அதிகமாக எல்லோரும் உள்ளூர் நெசவுப் புடவைகளையே கட்ட ஆரம்பித்தனர்.

**7. இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணாமம் எடுப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அஹிம்சா வழியிலான போர்முறைகளில் காந்திய இயக்கங்களின் பங்கு எவ்வகையிலாக இருந்தது?**

இலங்கை அரசியலில் வலிவடக்கு பாராளுமன்ற உறுப்பினர், திரு.S.J.V.செல்வநாயகம் அவர்கள் காந்திஜியைப் பின்பற்றினார். அவரே மக்களுக்கு சுதந்திர தாகத்தையூட்டினார். எதிர்க்கட்சியிலிருந்து பல காரியங்களில் வெற்றி கண்டார்.

குறிப்பு: தமிழ்க் கோங்கிரசும் தமிழரசுக்கட்சியும் இணைய திரு.செல்வநாயகம் வழிவகுத்தார். அதன் பயனாக ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் தான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 1975 அளவில் தோன்றியதென்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

**8. தங்கள் வாழ்வில் சில அனுபவங்களைப் பகிரமுடியுமா?**

எனது வாழ்வில் சாந்தம், பொறுமையை அதிகமாகக் கடைப்பிடித்தேன். உயர்தர ஏனைய மாணவர் மத்தியில் நல்ல உபாத்தியாயர் பட்டம் பெற்றேன். அறிவறிந்த மக்களுடன் வாழ்கிறேன்.

5ம் பக்கம் பார்க்க

4ம் பக்க தொடர்ச்சி

**9. இன்றைய புலவர் நிலை எப்படியுள்ளது?**

1943-46 ல் வண்ணை வித்துவான் ந.சுப்பையாபிள்ளையிடம் மதுரைப் பண்டிதருக்கு முழுமையாக படித்தேன். மார்ச் மாதம் சோதனை. சுட்டிலக்கமும் வந்தது. ஆயினும் அக்கால வாழ்க்கைத் துணைவியார் சரஸ்வதி திடீரெனக் காலமானதால் பரீட்சையைக் கைவிட்டேன்.

சுமார் 3 மாதங்களின் பின் திருநெல்வேலியில் பண்டிதமணியிடம் விஷயத்தைக் கூறினேன் தெரியுமென்றார். உடனிருந்த கைலாசபதி அவர்கள் பண்டிதப்படிப்பு அறிவு போதாதோ? பத்திரமா தேவை? என்றார். அவ்வளவு தான். கைவந்த மரபுச் செய்யுள்களை பத்திரிகைகளுக்கு அனுப்பி அனுப்பி இதுவரை 40 பிரபந்தங்களைப் பாடி வெளியிட்டேன். நீதி கிடைக்குமென்று இறைவனைத் தொழுதலன்றி நமது சிறார்களுக்கு என்னதான் கூறமுடியும்? காந்திஜி கடைப்பிடித்த அந்த ஆத்மீகம் வீண்போகாது இன்று நானொரு பெரிய ஆத்மீகி.

---

7ம் பக்க தொடர்ச்சி

**காலைச் சுற்றும்.......**

வசதிகுறைந்தவர்களும் பகட்டான வாழ்க்கைக்காகச் செலவிடுவது பொருளாதாரச் சீர்குலைவுக்கு வழிவகுக்கும்.

ஒருவர் நிகழ்கால வருவாய்க்குள் செலவைக் கட்டுப்படுத்த முடியாத பொழுது கடன் வாங்குகின்றார். வாங்குகின்ற கடனை எதிர்கால வருவாயிலிருந்து கொடுக்க வேண்டும். இது எதிர்கால வருவாயை நிகழ்காலத்தில் செலவழிப்பதாகும். இல்லை சேமிப்பிலிருந்தோ, சொத்தை விற்றோ கொடுப்பதாகும். இது கடந்த கால வருவாயை இப்பொழுது நுகர்வது. இரண்டும் நல்லதல்ல.

மேலும், கடன் வாங்கிச் செலவிடும் பழக்கமுள்ளவர்களால் நுகர்வைக் கட்டுப்படுத்த முடியாது. கடன் கிடைக்கின்றவரை செலவிட்டுக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது வங்கிகளில் ஏராளமாக மக்களின் சேமிப்புக்கள் (Savings) வைப்புக்களாக இருக்கின்றன. ஆதலால் வங்கிகள் திரும்பச் செலுத்தும் ஆற்றல் உடையவர்களைத் தேடிப் பிடித்துக் கடன் கொடுக்கின்றன. இதற்கு வகை வகையாகக் கடன் திட்டங்கள் (Credit Schemes) வைத்திருக்கின்றன. இந்தத் திட்டங்களில் பொருட்களை வழங்கவும், தவணை முறைகளில் பொருட்களை விற்கவும் பெரிய நிறுவனங்கள் சுற்றி வருகின்றன. காத்திருக்கின்றன.

கடன் வாங்கிச் செலவிடுகின்றவர்களிடம், நுகர்வுக் கலாசாரப் பொறியில் (Trap) சிக்கிக் கொள்பவர்களிடம் சேமிப்பு இருக்காது, மனஅமைதி தொலைந்துவிடும். "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற நிலைக்குக் கடன்பட்டவர்கள் தள்ளப்படுவார்கள்.

கடன் கலாசாரம் வெளிப்படையாகப் பார்க்கின்ற பொழுது தனிமனிதச் சிக்கலாகத் தோன்றுகின்றது. ஆனால் உண்மையில் இது சமுதாய, நாட்டின் சிக்கலாகும்.

இப்பொழுது கடன் கொடுப்பதில் வங்கிகளும், நிதி நிறுவனங்களும், அரசும் தீவிரமாக ஈடுபடுகின்றன. வளர்கின்ற நமது பொருளாதாரத்தில் சேமிக்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள், குறிப்பாக மேல்மட்ட நடுத்தர மக்கள் வட்டி வருவாய் கருதி வங்கிகளில், நிதி நிறுவனங்களில் வைப்புக்களில் வைக்கின்றனர். இந்தப் பணம் கடன் தரப் பயன்படுகின்றது.

வணிகர்களும், தொழில் முயல்பவர்களும், பெரிய தொழில் அதிபர்களும், நுகர்வோர்களும் ஆயிரக்கணக்கிலிருந்து கோடிக் கணக்கு வரை கடன் பெறுகின்றனர். பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் போன்ற அமைப்புக்களுக்கு அரசே கடன் கொடுக்கக் கூறுகின்றது. வட்டி விகிதம் குறைந்து வருவது கடன் பெறுபவர்களை ஊக்குவிக்கின்றது. மொத்தத்தில் நாட்டில் வங்கிக் கடன்கள் கூடிக் கொண்டே செல்கின்றன.

"ஒரு நாட்டில் கடன்கள் கூடுவது வளர்ச்சியின் அடையாளம் தானே" என்று சிலர் கூறலாம். உண்மைதான். கடன்களை வாங்குபவர்கள் திருப்பிக்கட்ட, பணம் சுழற்சியில் பெருகி, ஆக்க பூர்வமாகச் செலவிடப்பட்டால் வளர்ச்சிதான். மாறாக கடன் வாங்குகின்றவர்கள் நுகர்வுக்குச் செலவிட்டுவிட்டு, கடனைக் கட்டவில்லை என்றால் சிக்கலாகின்றது.

இந்திய மூலதனச் சீரமைப்பு நிறுவனம் (Asset Reconstruction Company of India) நமது நாட்டு வங்கிகள் கடன் கொடுத்து, கடன் பெற்றவர்களிடமிருந்து வாராக் கடனாக 2005 இல் ரூ.2,36,000 கோடி இருப்பதாகக் கூறுகின்றது. இந்த வாரக் கடனளவு 2000 இல் 75000 கோடியாகவும் 2003 இல் 126000 கோடியாகவும் இருந்ததாகக் கூறுகின்றது. அதாவது வாராக் கடனளவு ஐந்தாண்டுகளில் மூன்று மடங்காகியுள்ளது. இதே நிலை தொடர்ந்தால் யார் பாதிக்கப்படுவார்கள்என்பதை எண்ணிப் பார்த்தால் விளைவு பயங்கரமாக இருக்கும் என்பது புரியும்.

"காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது" என்பார்கள். கடனும் அப்படித்தான். "தற்கொலை செய்து கொள்ள விரும்புபவர்களுக்குக் கயிறு துணை செய்வது போல, அழிய ஆவல் கொண்டவர்களுக்குக் கடன் உதவுகின்றது" என்பார்கள். இன்று இது நடைமுறை உண்மையாகி வருகின்றது.

கடன்பட்ட சிலர், சில குடும்பங்கள் தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளிவருகின்றன. பல கடன் தொல்லைத் தற்கொலைகள் வெளியில் தெரியாமல் போகலாம். இது நல்ல ஆரோக்கிய சமுதாயத்திற்கு (Healthy Society) அடையாளமல்ல.

ஓரளவு வசதியானவர்கள்கூட வீடுகள் கட்ட, பிள்ளைகளைப் படிக்க வைக்க, நுகர் பொருட்கள் வாங்க என்று கடன் வாங்குகின்றனர். கடன் வாங்குகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகின்றது. வட்டியும், பணமதிப்பும் குறைவது சேமிப்பைப் பாதித்துக் கடனளவைக் கூட்டுகின்றது. இதன் விளைவு இந்தக் கடன் நாட்டின் காலைச் சுற்றி நடந்து முன்னேற முடியாமல் பாதிக்கும்.

கடனின் விளைவுகளை நமது மக்கள் உணர வேண்டும். தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் நுகர்வுக் கலாசாரம், கடன் கலாசாரம் வளர்வதன் சீர்கேடுகளை விளக்க வேண்டும்.

வங்கிக் கடன்களை நெறிப்படுத்துவதும், வழிகாட்டுவதும், கட்டுப்படுத்துவதும் அரசின் கடமையாகும். வேளாண் கடன், தொழில் கடன் ஆகியவற்றிலிருந்து நுகர்வுக் கடனைப் பிரித்துக் கட்டுப்படுத்த வேண்டும். வாராக்கடன் வளர்வது வங்கிகளின் முறிவுக்குக்கூடக் காரணமாகலாம். அது எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும்.

இன்றும், என்றும், "எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை", என்பது தான் மனிதனைத் தரமான வாழ்க்கை நடத்தச் செய்யும். உயர்த்தும். நுகர்வுக் கலாசாரம் மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்தும், வீழ்த்தும். மக்கள் இன்பமாய் வாழ கடன் கலாசாரம் உறுதியாகத் துணை செய்யாது.

தங்களது வருவாய்க்கேற்ப வாழ்ந்து சேமிப்பவர்கள், நாட்டின் நிலையான வளர்ச்சிக்குத் துணை நிற்பவர்கள். அந்த வரிசையில் அணிவகுப்போம், நாட்டைக் காப்போம்.

**முனைவர் மா.பா.குருசாமி**
இயக்குநர்
குமரப்பா ஆராய்ச்சி நிறுவனம்
திண்டுக்கல்.

நன்றி: சர்வோதயம்

# மகாத்மாகாந்தி அவர்களின் சாதனை வெற்றி அளிக்க உதவிய வித்துக்களிற் சில..

**பகிர்ந்து கொள்கிறார் கரவை கிழக்கு, க.சி.சண்முகம்**

உழைப்பு உயர்வு தரும். உழைக்குங் கரங்களை நாம் போற்றுதல் வேண்டும். நிலத்தில் உழைப்பவனை விவசாயி என்கின்றோம். நீர்நிலைகளைக் கடந்து செல்வதற்கு உதவி செய்பவனை ஓடக்காரன், படகுக்காரன், கப்பற்காரன் என்கிறோம். எனவே நிலத்தையும் நீரையும் உபயோகப்படுத்தி அவற்றில் எமது உழைப்பை நிறுத்தி முயற்சி செய்து வந்தால் நிலம் உணவுப் பற்றாக்குறையைப் போக்கி மகிழவைக்கும். அதற்கு நீர் உறுதுணை புரிந்து சகல விதமான உணவுப் பொருள்களை உண்டாக்க உதவிபுரியும். பயிர்கள் செழித்து வளர்வதற்கும் நீர் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். "வரப்புயர நீர் உயரும்" என்ற எடுத்துக்காட்டும் இதனை வலியுறுத்தும். நன்றான உழைப்பு நலம்பல தரும், "வீண் வம்பு விஷப் பாம்பு" என்ற கூற்றுக்கே இடமளிக்காது, "வீணில் உண்டு களித்திருப்போரை" எங்கேயும் காணமுடியாது. தொழில் தொழில் என்றே எங்கும் எதிரொலிக்கும். தொழில் வணக்கத்திற்குரிய ஒன்றாகும். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்னும் ஆன்றோர் அமுதமொழியையும் எடுத்துக்காட்டி எம்மை மகிழ வைக்கும்.

இறைவனிடம் உண்டாகும் பக்தியில் தியாக சிந்தனை மிளிர்ந்து தோன்றுதல் வேண்டும். ஒவ்வொருவரும் தனக்கென வாழாப் பிறக்குரியாளராக" வாழுதல் வேண்டும். "அன்புடையர் என்பு முரியர் பிறர்க்கு" என்று எண்ணத் தகும் வாழ்வாக அது அமைந்து துலங்குதல் வேண்டும். "அன்பும் அருளும் உடையதாக" இருந்து, "பண்பும் பயனும் உடையதாகவும்" அது திகழ்தல் வேண்டும்.

காலத்தை வீணாகக் கழித்தல் கூடாது, கழித்த நாட்கள் மீண்டும் வரப்போவதில்லை. நாள் என்பது மக்களின் வாழ்க்கையைத் துண்டாடும் வாள் என்று நாம் நினைத்தல் வேண்டும். இதனால் நாம் சுறுசுறுப்பாக இருத்தல் வேண்டும். சோம்பலுக்கு இடமளிக்கக்கூடாது. நல்லனவற்றைச் செய்து என்றும் வாழ்ந்து வந்தால் சமூகம் எங்களைஎன்றும் வரவேற்கும்.

"பணியுமாம் என்றும் பெருமை", "ஒழுக்கம் உயிரினும் மேலானது", கற்றதன் பயன் கடவுளை என்றும் வணங்குதலே, "உண்மை உயர்வு தரும்", "பயனில் சொல்" சொல்லாது பயனுள்ள சொற்களையே என்றும் சொல்லி வருதல் வேண்டும். "இன்சொல் சொல்லி வருக" மனச்சாட்சியின்படி நடந்து கொள், நல்ல செயல்களை நாள்தோறும் செய்து வா", "இயல்வது கரவேல்", என்ற அமுதமொழியை அனுசரித்து நின்னால் இயன்ற உதவிகளைப் பிறர்க்குச் செய், உலகத்தார் இன்புறும்படி நடந்து கொள், இவைகளே நினக்கு உறுதுணையாக இருந்து இம்மை மறுமை இரண்டிற்கும் இன்பம் பயந்து, சகல செயல்களையும் வெற்றி பெறச் செய்து, மகாத்மா காந்தி அடிகளார் அவர்களையும் என்றும் நினைவு கூரச்செய்து, உவகை நல்கி நினக்கு இன்பம் நல்குவனவே.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க", "நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை", "உப்பிருந்த பாண்டமும் உபாயம் இருந்த நெஞ்சமும் தட்டி உடையாமல் தானே உடையும்", "நெஞ்சு என்றும் இறைவனை நினைந்து வணங்குதல் வேண்டும். "நெஞ்சில் உரம் நேர்மைத்திறம், வஞ்சனை இன்மை" என்பன எப்போதும் உயர்வு தருவன. மனம் நன்றானவருக்கு எப்போதும் சகல செல்வங்களும் வந்து சேர்ந்து அவரை மகிழ்விக்கும். மனஅடக்கம் மாட்சிமை பொருந்திய செயல்களைச் செய்வித்து முன்னேற்றம் நல்கும், "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்னும் அமுதமொழியையும் கைக்கொண்டு "உள்ளத்தாற் பொய்யா தொழுகுவோம்", "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம்" மகாத்மாகாந்தி அடிகளார் இருந்து போற்றப்பட்டு வருவதை அறிந்தும் உளம்மிக மகிழ்கின்றோம்.

"தருமம் தலை காக்கும்", "அறம் செய விரும்பு", "அறத்தால் வருவதே இன்பம்", "ஈதல் அறம்", தீவினை விட்டீட்டல் பொருள்", "தவம் செய்", ஆனால் "ஆசையுட்பட்டு அவம் செய்யாதே", "கொன்றன்ன இன்னா செயினும்" அப்படிச் செய்தவரை மன்னித்து அவருக்கும் நன்மை செய்", "அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்" ஆகிய இவைகளைக் கனவிலும் கூட நினையாதே. அப்படி நினைந்தாயானால் நினது முன் செய்த புண்ணியம் நும்மை விட்டுத் தானாகவே நீங்கிவிடும். எனவே நினைப்பவை எல்லாம் உயர்ந்ததும் நல்ல பயன்களைத் தருவதாகவும் அமைந்து யாவருக்கும் இம்மை மறுமைப் பயன்களை நல்கட்டும். மகாத்மாகாந்தி அடிகளார் அவர்களை நினைந்து, "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆன்றோர் அமுதமொழிக்கு ஏற்ப என்றும் இன்பம் எய்தி உய்தியும் பெற்று மகாத்மாகாந்தி அடிகளார் அவர்களை முன்னிட்டு உவகை அடைந்து ஆன்ம சுகம் பெறுவோமாக.

பின்வரும் விடயங்கள் மகாத்மாகாந்தி அடிகளார் அவர்களை என்றும் நினைவில் வைத்திருந்து உய்திபெற வேண்டி எம்மால் போற்றப்பட வேண்டியவையே அவையாவன:-

தியாக உணர்வு திரு அனைத்தும் தரும், "உள்ளம் பெருங் கோயில்" என்ற அமுதமொழியை என்றும் போற்றி வாழ்வோம், "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்" நின்று நடுவு நிலைமையைக் காப்பாற்றி உபயோகம் உள்ளவராக இருந்து கொள்வோம்.

மனச்சாட்சியின்படி நடந்து தெய்வத்தின் திருவருளைப் பெற்றுக் கொள்வோம். அடக்கம், திருவருள் நோக்கம், செய்ந்நன்றி மறவாமை, பொறுமை, விடாமுயற்சி, உழைப்பின் மகத்துவம், மக்கட்சேவை, உதவி செய்யும் மனப்பான்மை என்பவைகளை என்றும் போற்றி நடந்து, "எல்லோரும் இன்புற்றிருக்க நினை", என்னும் அமுதமொழி எங்களில் உறுதியாகச் சுவறி இருக்கட்டும். நட்பு, தயை, கொடை என்பன என்றும் துணையாக இருக்கட்டும். அடக்கம் என்றும் சுகம் தரும். அடங்காமை என்றும் துன்பந்தரும், சமரசநோக்கு உயர்வையே தரும். அ்.து அனைவரையும் மகிழ வைக்கும் "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவஸ்தைப்பட்டாலும் "முத்தியின்பத்தை நினைந்து வாழ்ந்து உய்தி பெறுவோம்.

"தெய்வம் நமக்குத் துணை" என்று எப்போதும் நினைத்திருந்து மகாத்மாகாந்தி அடிகளார் அவர்களது உபதேசத்தை நினைவு கூர்ந்தும் சகல செல்வங்களையும் பெற்றுச் சிறப்புடன் நாம் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனது திருவருள் முன்னிற்பதாக.



ஆக்கம்:
கரவைகிழக்கு, **க.சி.சண்முகம்,**
ஓய்வு பெற்ற அதிபர்,
பாலபண்டிதர்.

## *மகாத்மா காந்தியின் அறுபத்தோராவது சிரார்த்த தினம் 30.01.2009*

**சர்வதேச சர்வோதய வாரம் (24.01.2009 முதல் 30.01.2009 வரை)**



மகாத்மா காந்தியடிகளின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு *அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர்* சோ.க.தம்பிப்பிள்ளை அவர்கள் வெளியிட்ட அறிக்கை இது.

உண்மையின் உயர்வால் உயர்ந்தது மனிதப் பண்பாட்டு வளர்ச்சியாகும். அகிம்சை மூர்த்தி அண்ணல் மகாத்மாகாந்தியின் பண்பாடுகள் சர்வதேச சமூக விழிப்புணர்வுக்கு வழிகாட்டுகின்றன.

சர்வதேச சர்வோதய வாரம் அண்ணல் மகாத்மா காந்தியினது அமரத்துவத்தை முதன்மைப்படுத்தும் வாரமாக சிந்தித்து செயல்படுவோம்.

அமரத்துவதினமாகிய 30ம் திகதி தை மாதம் 1948ம் ஆண்டு உலகமே சிந்தித்த தினமாகும்.

இத்தினம் சர்வதேசமும் அகிம்சையையும் சர்வதேச சர்வோதய சிந்தனையையும் உலகம் சிந்திக்க வைத்தது.

எனவே இத்தினத்திற்கு முன்னர் ஒருவார காலம் உலகை சிந்திக்கவும் அமரரின் சர்வோதய சிந்தனைகள் பாரதநாட்டிலும் இலங்கையிலும் உலக நாடுகளிலும் உள்ளூர் உற்பத்திக்கும் மக்கள் சேவைக்கும் வழிகாட்ட வழியமைப்போம்.

காந்தியின் கல்விக்கொள்கை சர்வதேச மொழிகளிலும் சர்வதேச மக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படின் உலக அமைதியும், சாந்தியும், சமாதானமும் முதன்மை பெறுவது வெளிப்படையாகும்.

எனவே இவ்வாரத்தில் மக்கள் நலன்புரி வாரம், போதைவஸ்து தடுப்பு வாரமாகவும் மதுவிலக்கு வாரமாகவும், தாவரஉணவு உற்பத்தியை ஊக்குவித்தல், கிராமிய தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல் விவசாய விருத்தியை ஊக்குவித்தல் தேசிய உற்பத்திகளுக்கும் தேசிய வளங்களது பாதுகாப்பிற்கும் வழி காட்டுதல், பசுஇன பொருளாதாரத்தை விரிவாக்குதல் என்பன சிறப்புடையதாகும்.

இதற்காக மாணவர்களதும் மக்களதும் சிரமதானப் பணிகள், வழிபாட்டுத்தலங்கள், வீதிகள், பொது இடங்களில் சுகாதாரப்பணிகளை விரிவாக்குதல் சிறப்புடையது. பொதுக்குறியீடுகளை மக்களது பயன்பாட்டில் விரிவாக்குதல் சிறப்புடையதாகும்.

# காலைச் சுற்றும் கடன் கலாசாரம்

இன்று நாம் உலகமயமாக்கல் சூழலில் வாழ்கின்றோம். முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, போக்குவரத்து, செய்தித் தொடர்பு வளர்ச்சியின் விளைவாகச் சில புதிய பண்பாடுகளை எளிதாக உருவாக்குகின்றனர். பன்னாட்டு நிறுவனங்கள் (Multi - National Corporation) திட்டமிட்டு, கருத்தரங்குகள், விளம்பரங்கள் போன்றவற்றிற்கு கோடிக்கணக்கில் செலவிட்டு உலகக் கலாசாரங்களை (World Cultures) வளர்கின்றன.

புதிய கலாசாரங்களின் ஆதாரமாக இருப்பது நுகர்வுக் கலாசாரம் (Consumerism). நாகரிகத்தின் பெயரால் புதுப்புதுப் பொருட்களை நுகர்வதில் தான் நாகரிகம் இருக்கின்றதென்றமாயையை (Illusion) உருவாக்கி விட்டனர்.

இன்றைய நுகர்வுக் கலாசாரம் ஏழு "சி" (C) க்களில் இருக்கின்றதாம். அவை

1) கணிப்பொறி (Computer)
2) செல் தொலைபேசி (Cell Phone)
3) திரைப்படம் (Cinema - Television T.V)
4) கடன் அட்டை (Credit Card)
5) கார் (Car)
6) கேமரா (Camera)
7) உணவு விடுதி (Cafetaria) என்கின்றனர்.

முதலாவதாக ஒருவரை நாகரிகமானவரென்று கருத வேண்டுமானால் அவரிடம் கணிப்பொறி இருக்க வேண்டும். தேவையோ, தேவையில்லையோ இன்டர்நெட் பார்க்க, விளையாட, படங்கள் பார்க்க கணினி தேவை.

இரண்டாவதாக. கையில் செல்போன் இருக்க வேண்டும். நடந்துகொண்டு, வண்டி ஓட்டிக்கொண்டு, நாலு பேர் சுற்றியிருக்க கத்திக் கத்திப் பேச வேண்டும். இல்லை செல்போனைக் கையில் வைத்துக்கொண்டு எஸ்.எம்.எஸ். அனுப்பிக்கொண்டோ, இல்லையேல் விளையாடிக்கொண்டோ இருக்க வேண்டும். விலையுயர்ந்த செல்போன் வைத்திருப்பது அவரவர் உயர்மரியாதை நிலையைக் (அந்தஸ்தை) காட்டும்.

மூன்றாவதாக, வீட்டிலேயே திரைப்படம் பார்க்க வசதி. தொலைக்காட்சிப் பெட்டி ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். படங்களை, தொடர்களைப் பார்க்கின்றார்களோ இல்லையோ, கண்ணையும் கருத்தையும் கவரும் விளம்பரங்களால் ஈர்க்கப்படுவார்கள். அவற்றில் எவற்றை வாங்குவது என்பதுதான் அன்றாடப் பேச்சாக இருக்கும்.

நான்காவதாக, கையில் கடன் அட்டை இருக்கவேண்டும். எப்பொழுது என்ன பொருள் வாங்க வேண்டுமென்றாலும் கையில் பணமில்லை என்று கவலைப்படக்கூடாது. கடன் அட்டையின் மூலம் எந்த நேரத்திலும் பணம் பெறும் வாய்ப்புப் பெற்றிருக்க வேண்டும்.

ஐந்தாவதாக, கார் வைத்திருக்க வேண்டும். கார் இல்லையென்றால் வாடகைக் காரிலாவது செல்ல வேண்டும். அப்பொழுதுதான் பார்ப்பவர்கள் மதிப்பார்கள்.

ஆறாவதாக, கையில் டிஜிடல் கேமரா இருக்க வேண்டும். பார்க்கின்ற நண்பர்களை, உறவினர்களைப் படம் எடுக்க வேண்டும். அதற்கு ஒரு தனி மரியாதை.

ஏழாவதாக, எல்லாவற்றிற்கும் மேலாக, பெரிய உணவு விடுதிகளில் (Star Hotels - Cafetaria) சென்று அடிக்கடி சாப்பிட வேண்டும். இப்பொழுது பெரிய, புதிய விரைவு உணவு (Fast Food) விடுதிகள் தோன்றுகின்றன. அங்கு சென்று புதுப்புது உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். சாப்பிட்டதைப் பலரிடம் கூறிப் பெருமைப்படவேண்டும்.

இவற்றை எல்லாம் வைத்துக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உங்களது வருவாய் போதுமானதாக இல்லையென்று கவலைப்பட வேண்டாம். தேடிப் பிடித்துக் கடன் கொடுப்பதற்கு வங்கிகள் இருக்கின்றன. இதனால் கடன் கலாசாரம் (Credit Culture) வளர்ந்து வருகின்றது.

மேற்போக்காகப் பார்த்தால் வங்கிகளில், கூட்டுறவுச் சங்கங்களில், தனியாரிடம் கடன் பெறுவதில் தவறு இல்லை என்று தோன்றும். "அவசரத் தேவைக்குத்தானே கடன் வாங்குகின்றோம். அடுத்து வருவாய் வருகின்ற பொழுது கொடுத்து நேர் செய்து விடப்போகின்றோம். இதில் என்ன தவறு" என்று கேட்கலாம்.

சிந்தித்துப்பார்த்தால் கடனின் இயல்பும், தாக்கமும் புரியும். கடன்வாங்கும் பொழுது வட்டி கட்ட வேண்டும். தொழில், வாணிபம் நடத்த கடன் வாங்கி, முதலீட்டிலிருந்து வருவாய் பெற்று கடனைத் திருப்பிக் கட்டிவிட்டால் வளர்ச்சி ஏற்படும். இப்படி ஆக்கப் பணிகளுக்கு வாங்கும் கடன் நல்லது. இத்தகைய கடன் நாட்டில் கூடலாம்.

நுகர்வுக் கடன் கூடுவதுதான் சிக்கலானது, சிந்தனைக்குரியது. இன்றைய சூழலில் நுகர்வின் அளவை வரம்பின்றிக் கூட்டிக்கொண்டு செல்லலாம். வசதியானவர்கள். தங்களது செல்வச்செழிப்பைக் காட்ட ஆடம்பரப் பொருட்களில் மிகுதியாகச் செலவிடுவார்கள். இதனை "வெளிகாட்டும் விளைவு" (Demonstration Effect) என்பார்கள். திருமண வீடுகளுக்கும், திருவிழாக்களுக்கும் செல்பவர்கள் விலையுயர்ந்த பட்டாடைகள், நகைகள் அணிந்து செல்வதைக் காணலாம். செல்வந்தர்களைப் பின்பற்றி

5ம் பக்கம் பார்க்க



சர்வதேச ரீதியாக அகிம்சை தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட காந்தியடிகளின் பிறந்த நாளில் அமைதியை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்களுக்கு தேசபந்து டாக்டர் A.அரசக்கோன் அவர்கள் மாலையில் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைப்பதை படத்தில் காணலாம். 2008 அக்டோபர் 2

# உலக நீதி

**ஓ** தாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
**ஒ** ருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
**மா** தாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
**நெ** ஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்.
**ம** னம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
**த** ருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
**க** ற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
**மூ** த்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.
**பு** ண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
**செ** ய்நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

**உலகநாதர்.**

**விளக்கம்**

1. ஒரு நாளும் படிக்காமல் இருக்க கூடாது.
2. மற்றவர் மனம் நோகும்படி தீய சொற்களைப் பேசக்கூடாது
3. பெற்ற தாயை ஒரு நாளும் மறக்கக் கூடாது.
4. தெரிந்து கொண்டே பொய் சொல்லக்கூடாது.
5. மனம் விரும்புவதை எல்லாம் செய்யக் கூடாது.
6. தர்மம் செய்வதை ஒரு நாளும் மறக்கவே கூடாது.
7. கற்றவரை ஒருநாளும் இகழ்ந்து பேசக்கூடாது.
8. பெரியோர்களின் அறிவுரைகளை மறக்கக்கூடாது.
9. யாருடைய மனதும் புண்படக்கூடிய வார்த்தைகளைக் கூறக்கூடாது.
10. தக்க சமயத்தில் ஒருவர் செய்த உதவியை எக்காலத்திலும் மறக்கக்கூடாது.

# அன்பர் தபால்

2008 ஏப்ரல் - ஜுலை "காந்தீயம்" இதழில் டாக்டர் சிவசிவ எழுதிய அதிக சத்தம் சூழலை மாசுபடுத்துகின்றது என்ற கட்டுரை படித்தேன். இதை வாசிப்பவர்களில் ஒருவராகிலும் நன்மை பெற "காந்தீயம்" வழிகாட்டுவதற்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். இக்கட்டுரையை 06.07.2008 ஞாயிறு வெளியாகிய "உதயன்" பத்திரிகை அதிக சத்தம் சூழலை மட்டுமா மாசுபடுத்தும்? இல்லை, உங்களையும் தான் நோயாளியாக்கும் என்ற தலைப்பில் மறுபிரசுரம் செய்திருந்தது. இதன் மூலம் இவ்வாறான நல்ல செய்திகளை இன்று பல்லாயிரக்கணக்கானவர்கள் வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள்.

**க.வாமதேவன்**
பண்ணாகம், சுழிபுரம்

# புரட்சித் துறவி நீ

1. இந்திய மக்களின் சுயஇறைமை வேண்டி
இதய சுத்தியுடன் உழைத்த இறையன் நீ
இந்நிலம் "மகாத்மா" என மகுடம் சூட்டி
இன்புற்ற இமயமலை ஒத்த ஏந்தல் நீ

2. சமயத்தை சன்மார்க்க நெறியில் புடமிட்டு
சமூகத்தைச் செப்ப னிட்ட சீராளன் நீ
சமயம் முதல் சமூக அரசியல் பொருளியல்
சங்கமித்த ஒன்றே செகமென்ற சிட்டன் நீ

3. அகிம்சை வழியில் அமுதனைத் தேடிய இவ்
அகிலம் முன்கண்டிராத அதிசயப் பிறவி நீ
சுகிர்தம் மலர்ந்தெழில் சுரக்க சுயராச்சியம்
சோதியெனக் கிளர்ந்தெழச் செய்த சச்சையன் நீ

4. கூட்டு வாழ்வைக் குறியாய்க் கொண்டு யாரையும்
கூப்பிட் டாச்சிரமத்தில் குடியமர்த்திய கோ நீ
நாட்டு யர்வுக்கு நாளாந்த ஈருழைப்பும்
நேர்த்தியென்று நிலை நிறுத்திய நிதானி நீ

5. வருவாயை எல்லோர்க்கும் வகுத்து வழங்கி
வறிஞர்க்கும் வாழ்வாதார மளித்த வள்ளல் நீ
கருவி இயந் திரங்களை மக்கள் சொத்தாக்கி
கைராட்டு கோலோச்சச் செய்த கேளன் நீ.

6. துலங்கும் கதராடையிற் தொண்டர்குழு சகிதம்
தேசம் சுற்றிய சுதேசி இயக்கத் தலைவன் நீ
புலன்களை அடக்கி பிரம சரியத்தைப் பேணி
பிரமத்தை நெருங்கிய புரட்சித் துறவி நீ

**மணிமன்றன்**
யாழ்ப்பாணம்.

# செய்திச்சரம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தில் நிர்வாக சபைக்கூட்டம் 06.09.2009ல் சங்கத்தில் உபதலைவர் அ.இராமநாதன் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

மகாத்மாகாந்தியடிகளின் பிறந்த தினத்தை யாழ்ப்பாணம், பருத்தித்துறை கந்தரோடை ஆகிய இடங்களில் அனுஷ்ட்டிப்பது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினம் 15 நல்ல இனபலாமரக் கன்றுகள் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

மில்க்வைற் கனகராசா நினைவாக நினைவுப் பேருரை ஒன்றை ஒழுங்கு செய்வதென்றும் மூலிகைக் கண்காட்சியை ஏற்பாடு செய்வதென்றும் மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா 1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி